DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.37/2024**

Deposition of Witness : PW-1 (மனுதாரர்)

| | | | |
|---|---|---|---|
| Name : | சக்கனன் | Father's Name : | |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 25.10.2025

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.K.பார்த்திபன், கிரேடு 3 பெஞ்ச் கிளார்க்(மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**– தொடங்கப்பட்ட நேரம் :

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | – | விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–1 |
| 2 | – | காயச்சான்றிதழ் சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–2 |
| 3 | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–3 |
| 4 | – | குற்ற அறிக்கை சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–4 |
| 5 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–5 |

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.25 16:13:55 +0530

| | | | |
|---|---|---|---|
| 6 | – | மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–6 |
| 7 | – | பார்வை மகஜர் சான்றிட்ட நகல். | ம.சா.ஆ–7, |
| 8 | – | மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல். | ம.சா.ஆ–8 |
| 9 | – | மருத்துவ இரசீதுகள் அசல். | ம.சா.ஆ–9. |
| 10 | – | மனுதாரர் ஆதார் அட்டை நகல். | ம.சா.ஆ–10 |
| 11 | – | மனுதாரர் வங்கி பாஸ்புக் நகல். | ம.சா.ஆ–11 |
| 12 | – | மனுதாரருக்கு எடுக்கப்பட்ட ECG அசல். | ம.சா.ஆ–12 |
| 13 | – | மருத்துவ பரிந்துரை சீட்டு நகல். | ம.சா.ஆ–13 |
| 14 | – | லேபரட்டரி ரிசல்ட் அசல். | ம.சா.ஆ–14 |
| 15 | – | நுண்கதிர்படங்கள் (எண்ணம் 8) | ம.சா.ஆ–15 |

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ.1, ம.சா.ஆ.8, ம.சா.ஆ.10, ம.சா.ஆ.11 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.7, ம.சா.ஆ.9, ம.சா.ஆ.12 முதல் ம.சா.ஆ.15 ஆவணங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.13 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

விபத்தானது 29.07.2023ம் அன்று நடைபெற்றது என்றால் சரிதான். 6 காலதமாத்ததிற்கு பின்னிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல்தான் வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார் என்றும் அதற்கான சட்டப்பிரிவையும் சேர்த்துதான் (181 MV Act) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. விபத்துக்கு காரணமாக சொல்லப்பட்ட வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு போதிய செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் அது காப்பீட்டு விதியை மீறிய செயல் என்பதால் நான் கோரிய இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் எந்த விதத்திலும் அதற்கு கட்டுபட்டதல்ல என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை எனக்கு கிடைக்கதக்க வகையில் உத்தரவு பிறப்பிக்கப்படும்பட்சத்தில் அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்துதான் பெற்றுகொள்ள முடியும் என்றால் சரியல்ல. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.13ல் கண்டுள்ள தொகைகள் யாவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ இரசீதுகளில் முன்பணம், டூப்ளிகேட் பில், கிரிட் பில்களில் கண்டுள்ள தொகைகளும் எனது பெயரிடப்படாத பில்களில் கண்டுள்ள தொகைகளும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் டாடா தோஸ்த் வாகனத்தை வைத்து தொழில் செய்து வந்ததற்கும் மாதம் ரூ.30000/- வரை வருமானம் வரை ஈட்டி வந்ததற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமும் வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு தொடர் சிகிச்சை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்பொழுது என்னால் அன்றாட வேலைகளை செய்ய இயலும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ இரசீதுகளை உண்மையென நிரூபிக்க தகுந்த மருத்துவ அதிகாரிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பல்வேறு தலைபுகளில் நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

 SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.25 16:14:08 +0530 

விபத்தானது 6 மாதங்கள் காலதமாதத்திற்கு பின்பு மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் காப்பீடு விதிமீறல்களை மீறி வாகனத்தை இயக்கியுள்ளதாலும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.44 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.25 16:14:11 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 25.10.2025